

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஆர்.எஸ்.யுவராஜ் ஏற்பாட்டில் அச்சரப்பாக்கம் என்.கே.வி.மஹாலில் 47 கைம்பெண்கள் 47 கேக் வெட்டி துணை முதல்வருக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தனர். இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்எல்ஏ, நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர். இதில் மாவட்ட துணை அமைப்பாளர்கள் மணி, பால்ராஜ், ஆண்டோசிரில்ராஜ், கோகுலகண்ணன், கண்ணன், தம்பு, எழிலரசன், உசேன், ரத்தினவேல், கருணாகரன், வீரராகவன், பாஸ்கர், ஆனந்தகண்ணன், செல்வம், வரதராஜ், சுரேஷ்,விஸ்வநாதன், மணிபாரதி, வினோத், முத்து, செந்தில், சதீஷ்குமார், வெற்றிச்செல்வன், நிஷாந்த். ஜெயக்குமார், சூரியகுமார், பாண்டியன், மதுரை, தமிழரசு, லோகநாதன், சசிகுமார், ராமு, பாலசுதர்சனம், மாரிமுத்து, சங்கர், பாலாஜி, குமார், உமாபதி, துரை, குரு, ஆறுமுகம், ராகுல், அஜய், மற்றும் பலர் கலந்து கொண்டனர்.




நாமக்கல் மேற்கு மாவட்டம், பரமத்திவேலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பொத்தனூர், பாண்டமங்கலம், வெங்கரை, வேலூர், பரமத்தி ஆகிய பேரூர் பாக முகவர்களுக்கு வருகின்ற நவம்பர் 16, 17 ஆம் தேதிகளில் நடைபெறவுள்ள வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல், பெயர் சேர்த்தல் நீக்கல் முகாம் குறித்து ஆலோசனைக்கூட்டம் பரமத்திவேலூர் தொகுதி கழக அலுவலகம், கலைஞர் அரங்கில் மாவட்டக் கழக செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில், பரமத்திவேலூர் தொகுதி பொறுப்பாளரான மாநில அயலக அணி துணைச் செயலாளர் திருமதி.உமாராணி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

### தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் – கலை பண்பாட்டு இயக்கம் சார்பில்

# "இசை, நாட்டிய, நாடக, கிராமியக் கலை விழா"! - 7 நாட்கள் நிகழ்ச்சி!

## விஜயா தாயன்பன் தலைமையில் அமைச்சர்கள் – முன்னணியினர் பங்கேற்பு!

சென்னை, நவ.5-

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் (கலைப் பண்பாட்டு இயக்ககம்) சார்பில் இசை, நாட்டிய, நாடக, கிராமியக் கலை விழா இன்று (5.11.2024) மற்றும் நாளை (6.11.2024) இரு நாட்களில் மாலை 5.30 மணிக்கு திருவாவடுதுறை டி.என்.ராஜரத்தினம் கலையரங்கம், முத்தமிழ்ப் பேரவையில் நடைபெறுகிறது.

7.11.2024 முதல் 11.11.2024 வரை மாலை 5.30 மணிக்கு எண். 31, பி.எஸ்.குமாரசாமி ராஜா சாலை, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற வளாகம், திறந்தவெளி கலையரங்கில் நடைபெறுகிறது.

**முதல் நாள் நிகழ்ச்சி**

05.11.2024, செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு முத்தமிழ்ப் பேரவை, திருவாவடுதுறை டி.என்.ராஜரத்தினம் கலையரங்கில் நடைபெறுகிறது.

ஜி.ராமானுஜம் வரவேற்புரையில், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற உறுப்பினர் - செயலாளர் விஜயா தாயன்பன் தலைமையில், மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு முன்னிலையில், உயர் கல்வித்துறை அமைச்சர் கோ.வி. செழியன் விழாவை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றுகிறார்.

மாலை 5.30 மணிக்கு திருவாரூர் பக்தவச்சலம் குழுவினரின் கலை நிகழ்ச்சியும், மாலை 7 மணிக்கு முனைவர் லஷ்மி ராமசாமியின் 'புகழொடு தோன்றுக' பரத நாட்டியமும் நடைபெறுகிறது.

**இரண்டாம் நாள் நிகழ்ச்சி**

06.11.2024, புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு முத்தமிழ்ப் பேரவை, திருவாவடுதுறை டி.என்.ராஜரத்தினம் கலையரங்கில் நடைபெறுகிறது.

மங்கை அரிராஜன் வரவேற்புரையில், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற உறுப்பினர் - செயலாளர் விஜயா தாயன்பன் தலைமையில், மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு முன்னிலையில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதாஜீவன் சிறப்புரையாற்றுகிறார்.

மாலை 5.30 மணிக்கு வீணா கண்ணனின் காவியாலயா குழுவினரின் பரத நாட்டியம், மாலை 7.00 மணிக்கு முனைவர் சொர்ணமால்யா குழுவினரின் 'தமிழே' திராவிட பண்பாட்டின் சிறப்பு சதிர் நடன தொகுப்பும் நடைபெறுகிறது.

**மூன்றாம் நாள் நிகழ்ச்சி**

07.11.2024 வியாழக்கிழமை மாலை 5.30 மணியளவில் திறந்தவெளி கலையரங்கத்தில், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற வளாகத்தில் அ.ஜாகிர் உசேன் வரவேற்புரையில், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற உறுப்பினர் - செயலாளர் விஜயா தாயன்பன் தலைமையில், மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு முன்னிலையில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ. மெய்யநாதன் சிறப்புரையாற்றுகிறார்.

மாலை 6 மணிக்கு பார்வதி ரவி கண்டசாலா குழுவினரின் பரத நாட்டியம், மாலை 7 மணிக்கு சித்ரா முரளிதரன் அவர்களின் நிருத்திய சேக்ஷத்ரா நடனப் பள்ளி மாணவியர் வழங்கும் பரத நாட்டியம் நடைபெறுகிறது.

**நான்காம் நாள் நிகழ்ச்சி**

08.11.2024 வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணியளவில் திறந்தவெளி கலையரங்கத்தில், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற வளாகத்தில் என்.சத்தியராஜ் வரவேற்புரையில், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற உறுப்பினர் - செயலாளர் விஜயா தாயன்பன் தலைமையில், மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு முன்னிலையில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு. பெ.சாமிநாதன் சிறப்புரையாற்றுகிறார்.

மாலை 6 மணிக்கு அ. ஜாகிர் உசேன் அவர்களின் பரத நாட்டியம், மாலை 7 மணிக்கு க.செல்வகண்ணன் குழுவினர் வழங்கும் கிராமியக் கலை நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது.

**ஐந்தாம் நாள் நிகழ்ச்சி**

09.11.2024 சனிக்கிழமை மாலை 5.30 மணியளவில் திறந்தவெளி கலையரங்கத்தில், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற வளாகத்தில் நெல்லை ஜெயந்தா வரவேற்புரையில், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற உறுப்பினர் - செயலாளர் விஜயா தாயன்பன் தலைமையில், மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு முன்னிலையில், முன்னாள் மாநிலங்களவை உறுப்பினர் ஆர்.எஸ். பாரதி, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் பூச்சி எஸ்.முருகன் ஆகியோர் சிறப்புரையாற்றுகிறார்கள்.

மாலை 6 மணிக்கு டி. கே.எஸ். கலைவாணன் குழுவினர் வழங்கும் தமிழிசைப் பாடல்கள், மாலை 7 மணிக்கு ஸ்ரீலதா வினோத் குழுவினர் வழங்கும் 'வேலு நாச்சியார்' நாட்டிய நாடகம் நடைபெறுகிறது.

**ஆறாம் நாள் நிகழ்ச்சி**

10.11.2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணியளவில் திறந்தவெளி கலையரங்கம், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற வளாகத்தில் எம்.ஆர். எம்.பாலசுப்பிரமணியம் வரவேற்புரையில், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற உறுப்பினர் - செயலாளர் விஜயா தாயன்பன் தலைமையில், மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு முன்னிலையில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர் சிறப்புரையாற்றுகிறார்.

மாலை 6 மணிக்கு ஆல்வேஸ் கிரேசி கிரியேஷன்ஸ் குழுவினர் வழங்கும் "இனி இவன் இந்தியன்" சமூக நாடகம் நடைபெறுகிறது.

**ஏழாம் நாள் நிகழ்ச்சி**

11.11.2024 திங்கள் கிழமை மாலை 5.30 மணியளவில் திறந்தவெளி கலையரங்கம், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற வளாகத்தில் திருவாரூர் பக்தவச்சலம் வரவேற்புரையில், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற உறுப்பினர் - செயலாளர் விஜயா தாயன்பன் தலைமையில், மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு முன்னிலையில், மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் சிறப்புரையாற்றுகிறார்.

மாலை 6 மணிக்கு துரை பாலசுந்தரம் குழுவினர் வழங்கும் "ஸ்ரீ நரசிம்மர்" புராண நாடகம் நடைபெறுகிறது.



கிருஷ்ணகிரி மாவட்ட முதன்மை கல்வி அலுவலகத்திலிருந்து பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நேற்று ( 04.11.2024) புதிய பாரத எழுத்தறிவு திட்டத்தின் கீழ் வருகின்ற 10.11.2024 அன்று தேர்வு நடைபெறவுள்ளதையடுத்து சென்னையில் உள்ள இயக்குநர் மற்றும் அலுவலர்களுடன் இணையவழி கலந்தாய்வு கூட்டத்தில் கலந்து கொண்டார்.

### எஸ்.எம்.மதுரா செந்தில் – உமாராணி தலைமையில்

# பரமத்திவேலூரில் பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

நாமக்கல், நவ. 5 -

நாமக்கல் மேற்கு மாவட்டம், பரமத்திவேலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பொத்தனூர், பாண்டமங்கலம், வெங்கரை, வேலூர், பரமத்தி ஆகிய பேரூர் பாக முகவர்களுக்கு வருகின்ற நவம்பர் 16, 17 ஆம் தேதிகளில் நடைபெறவுள்ள வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல், பெயர் சேர்த்தல் நீக்கல் முகாம் குறித்து ஆலோசனைக்கூட்டம் பரமத்திவேலூர் தொகுதி கழக அலுவலகம், கலைஞர் அரங்கில் மாவட்டக் கழக செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில், பரமத்திவேலூர் தொகுதி பொறுப்பாளரான மாநில அயலக அணி துணைச் செயலாளர் திருமதி.உமாராணி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

ஒன்றிய கழக செயலாளர்கள் எம்.தங்கவேல், ஏ.பி.ஆர்.சண்முகம், கே. கே.சண்முகம், பேரூர் கழக செயலாளர்கள் ஆர்.கருணாநிதி, பி.முருகன், பி.முருகவேல், எம்.ராமலிங்கம், எம். ரமேஷ்பாபு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் அவர்கள் பேசுகையில் பாகமுகவர்கள் அனைவரும் வாக்காளர்கள் பெயர் சேர்த்தல் முகாமில் கலந்து கொண்டு 18 வயது பூர்த்தியடைபவர்களும், வாக்காளர் பட்டியலில் பெயர் இடம் பெறாதவர்களையம், புதியதாக குடிபெயர்ந்து உள்ள வாக்களர்களின் பெயர்களையும் புதிய வாக்காளர்கள் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும், சேர்க்கவும் உதவிட வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்தில் பொதுக் குழு உறுப்பினர்கள் பி.பி. சாமிநாதன், பி.சிவக்குமார், பேரூராட்சிமன்ற தலைவர்கள் மணி, சோமசேகர், சார்பு அணி நிர்வாகிகள் சுந்தர், உதயகுமார், தனகரன், மலர்கண்ணன், முரளி, வைரமணி, வசந்தி, குப்புசாமி, பாக்கியராஜ், சீனிவாசன் மற்றும் பாகமுகவர்கள் (BLA2) உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



மதுரவாயல் தொகுதி 91, வது வட்டம் (மற்றும்) 143,வது வட்டத்தில் இல்லம் தேடி பட்டா வழங்கும் சிறப்பு முகாம் முதலமைச்சர் கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மற்றும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் விற்பனை செய்யப்பட்ட பிளாக் 1 முதல் பிளாக் 8 வரை (மற்றும்) ஏரித்திட்டம் வீட்டு மனைகளுக்கு இலவச பட்டா வேண்டி விண்ணப்பிக்கும் சிறப்பு முகாம் துவக்க விழா முகப்பேர் மேற்கு சமுதாய நலக்கூடத்தில் நடைபெற்றது. இவ்விழாவை காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. சிறப்பு முகாமை துவக்கி வைத்தார். உடன் மண்டலகுழு தலைவர் பகுதி கழக செயலாளர் நொளம்பூர் வே.ராஜன், 7வது மண்டலகுழு தலைவர் பி.கே.மூர்த்தி, மாமன்ற உறுப்பினர் ஆ.மாலினி , வட்டச் செயலாளர்கள் அண்ணாதாசன், சி.சசிகுமார் , வீட்டு வசதிவாரியதுறை அதிகாரிகளும், வருவாய்த்துறை அதிகாரிகளும், எம்.கே ஞானசேகரன், ஆர்.ராக்கேஷ், ஆர்.ரசூல்தீன் பகுதி பிரதிநிதிகள் ஆர்.ஆனந்தஜோதி, ஜெ.சௌரி,வட்டகழக நிர்வாகிகள் தா.தாமோதரன், பி.ராஜேந்திரன்,எம் செல்வகுமார், அ.ப்பாசாமி,எஸ்.கெஜலட்சுமி மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

### ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி

# வட்டச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் மா.பா.அன்புதுரை அறிக்கை!

சென்னை, நவ.5-

ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதிச் செயலாளர் மா. பா.அன்புதுரை விடுத்துள்ள அறிக்கை வருமாறு :

மாவட்ட கழகச் செயலாளர் நே.சிற்றரசு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன் நாகநாதன், ஆயிரம் விளக்கு தொகுதி பார்வையாளர் கௌதமன் பங்கேற்கும் ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி வட்டச் செயலாளர்கள் கூட்டம் நாளை (6-11-2024 - புதன் கிழமை) மாலை 6:00 மணியளவில் இளங்கோ சாலையில் அமைந்துள்ள பகுதி கழக அலுவலகத்தில் பகுதி அவைத்தலைவர் எம்.ஆர். ஜம்புலிங்கம் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன் நாகநாதன், ஆயிரம் விளக்கு தொகுதி பார்வையாளர் கௌதமன் ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கிறார்கள்.

எனவே இக்கூட்டத்திற்கு பகுதி கழக நிர்வாகிகள் வட்ட கழக செயலாளர்கள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோது துணை முதல்வர் - இளைய தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழா, வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு மற்றும் கழக ஆக்க பணிகள் குறித்து ஆலோசிக்கப்படவிருக்கிறது.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### சென்னை வடக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் கவனத்திற்கு

# கழகத் தோழர்கள் - வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA2) - பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) - வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் - வாக்காளர் சேர்த்தல் பணியை சிறப்பாக செய்திடுவீர்!

## மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்திய தேர்தல் ஆணையம் வருகின்ற 01-01-2025 தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு தமிழகத்திலுள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட புகைப்படத்துடன் கூடிய வரைவு வாக்காளர் பட்டியலைத் தேர்தல் ஆணையம் 29-10-2024 அன்று வெளியிட்டுள்ளது. சென்னை வடக்கு மாவட்டத்திலுள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் 29-10-2024 முதல் 28-11-2024 வரை புதிய வாக்காளர்களைச் சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும் - திருத்தம் செய்யவும் மனுச் செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

இது தவிர தமிழ்நாடு மாநில தலைமை தேர்தல் அதிகாரியால் அறிவிக்கப்பட்ட 16-11-2024, 17-11-2024 மற்றும் 23-11-2024, 24-11-2024 சனி, ஞாயிறு நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளது.

அதன்படி, இந்த நாட்களில் விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்களர்களும். 1-1-2025 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று பூர்த்தி செய்து, அந்தப் படிவங்களை அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் கொடுக்க வேண்டும்.

இதனடிப்படையில் 2025-ஆம் ஆண்டு ஜனவரி 1-ஆம் தேதி 18 வயது நிரம்பியவர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம்பெறாத பெயர்களையும் புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும். தொகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும், தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

| | |
|---|---|
| **பட்டியலில் பெயர் சேர்த்தல் பெயர் நீக்கம்** | **படிவம் – 6**<br>**படிவம் – 7** |
| **தவறுகள் திருத்தம், சட்டமன்ற தொகுதிக்குள் திருத்தம், முகவரி மாற்றம், வாக்காளர் அட்டை நகல்** | **படிவம் – 8** |
| **அயல்நாடு வாழ் வாக்காளர்களை சேர்க்க (NRI Voters)** | **படிவம் – 6 A** |
| **ஆதார் எண் வாக்காளர் அடையாள அட்டையுடன் இணைக்க** | **படிவம் – 6 B** |
| **மேலும் சேர்ப்பதற்கு இணையதளம்** | www.nvsp.in<br>www.voterportal.gov.in |

| | | |
|---|---|---|
| 1. | பெயர்களைச் சேர்க்க/ நீக்க திருத்தம் செய்வதற்கு மனு கொடுக்க கால அவகாசம் | 29-10-2024 முதல் 28-11-2024 வரை |
| 2. | சிறப்பு முகாம் நடத்தப்படும் நாட்கள் | 16-11-2024, 17-11-2024 மற்றும் 23-11-2024, 24-11-2024 |
| 3. | இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாள் | 06-01-2025 |

மேலும், மேற்கண்ட நாட்களில் நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு பணியிலும், சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்களிலும், சென்னை வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) மற்றும் கழக நிர்வாகிகள் அனைவரும் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும், பகுதி செயலாளர்கள் - வட்ட செயலாளர்கள் இந்த பணியினை ஒருங்கிணைத்து அதன் விவரத்தினை உடனடியாக மாவட்டக் கழகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பு: வாக்காளர் சேர்க்கும் பணியின்போது நமது கழகத்தின் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள BLA2-க்கான மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC). இந்த பணியினை முழுமையாக ஈடுப்பட்டு 2026 சட்டமன்ற தேர்தல் வரை, தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ள BLO-க்களுடன் உடனிருந்து கண்காணிக்க கேட்டுக்கொள்கிறேன்.

**ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ.**

பொறுப்பாளர், சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க.